T-UN-670

தமிழ்ப் பல்கலைக் கழகச்
செய்தி மலர்

மலர் 5 | திருவள்ளுவராண்டு—2017 | கார்த்திகை 28 | 14—12—1986 | இதழ் 9

தமிழ்ப் பல்கலைக் கழகப் புதிய துணைவேந்தர்

தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் இரண்டாவது துணை வேந்தராகப் பேராசிரியர் ச.அகத்தியலிங்கம் எம்.ஏ., பிஎச்.டி., (கேரளம்), பிஎச்.டி (இந்தியானா, ஐ.அ.) அவர்கள் பணியமர்த்தப் பெற்றிருக் கிறார். மூன்றாண்டுகளுக் குரிய இப்பணிப் பொறுப்பை 1—12—'86 காலை ஏற்றார்.

பேரா.ச.அகத்தியலிங்கம் அவர்கள் 19-8-1929 –இல் நாகர் கோயிலில் பிறந்தார். இவர்தம் தந்தையார் திரு மா.சண்முகம்; தாயார் திருமதி அருணாசலத்தம்மாள்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழில் முதுகலை (சிறப்புத் தகுதி) ஆய்வுப் பட்டத்தையும் கேரளப் பல்கலைக் கழகத்தில் தமிழ் இலக்கிய முனைவர் (பிஎச்.டி.,) பட்டத்தையும் இந்தியானா பல்கலைக் கழகத்தில் மொழியியல் முனைவர் பட்டத்தையும் பெற்றார்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் மொழியியல் துறை உதவிப் பேராசிரிய ராகவும், சிறப்புநிலைப் பேரா சிரியராகவும், தில்லிப் பல்கலைக் கழகத்தில் உதவிப் பேராசிரியராகவும், உயர் விரிவுரையாளராகவும் பணியாற்றி யதுடன் 1967 முதல் 1985 வரை அண்ணாமலைப் பல்கலைக் கழக மொழியியல் உயர் கல்வி மையத்தின் இயக்குநர் மற்றும் பேராசிரியராகவும் பணியாற்றினார். அமெரிக்க ஐக்கிய நாட்டிலுள்ள மிக்சிகன் பல்கலைக் கழகத்தில் 1970—71 -இலும், 1978—'79 –இலுமாக இருமுறை மதிப்புறு மொழியியல் பேராசிரியராக இருந்தார்.

ஆக்கமுறை இலக்கணம், திராவிட மொழியியல், சங்கத்தமிழ், கிராமியக் கலை—பண்பாடு, மலையின மக்கள் ஆய்வு முதலிய பல துறைகளில் சிறப்பாய்வு செய்துள்ளார்.

ஏறத்தாழ முப்பதாண்டுக் காலம் கற்பிப்பதிலும் ஆய்விலும் ஆழ்ந்த பட்டறிவு பெற்று உலகத் தகைமை பெற்ற மொழியியல் அறிஞருள் ஒருவராகத் திகழ்கிறார்.

பள்ளி ஆசிரியராகப் பணிவாழ்வைத் துவங்கி உழைப்பு, திறமை, மதிநுட்பம், நூலறிவு ஆகியவற்றை ஏறுபடிகளாகக் கொண்டு படிப்படியாக வளர்ந்து மேதகு பணியாகிய துணை வேந்தர் பணியினை ஏற்றுள்ளார்.

புதிய துணைவேந்தரால் நெறிப்படுத்தப்பட்டு மொழியியல், தமிழியல் ஆய்வாளர்கள் ஐம்பதின்மர் முனைவர் பட்டம் பெற்றுள்ளனர்.

இலக்கணம், மொழியியல், சங்கத்தமிழ், தொல்காப்பியம், உலக மொழிகள் முதலிய பொருள்களில் 22 நூல்களை எழுதியுள்ள இவர் 119 ஆய்வுக் கட்டுரைகளைப் படைத்தவர் ஆவார். இவரால் தொகுக்கப்பட்டு 26 நூல்கள் வெளி வந்துள்ளன.

பன்மொழி அறிஞர் பேரா. தெ.பொ. மீனாட்சி சுந்தரனாரால் தொடங்கி வைக்கப்பட்ட மொழித்துறை, மொழியியல் உயர்கல்வி மையமாகியது. இம்மையத்தை முனைவர் ச. அகத்தியலிங்கம் அவர்கள் தம் ஆற்றல் வாய்ந்த தலைமையின் கீழ் இயக்கி வளர்த்தார். வெள்ளிவிழா ஏற்பாட்டில் உள்ள இம்மையத்தின் சிறப்பிற்குப் புதிய துணைவேந்தரவர் களுடைய பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகும். அனைத்திந்தியப் பல்கலைக் கழகங்களின் தமிழாசிரியர் சங்கப் பொதுச் செயலாள ராக 20 ஆண்டுக்காலம் இருந்ததும், அனைத்திந்தியத் தமிழ் மொழியிய லாளர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளராகப் பத்தாண்டுக் காலம் இருந்ததும் இவரது திறமைக்கும் தகுதிக்கும் எடுத்துக் காட்டுகளாகும்.

இவரது ஆசிரியப் ப்ணியின் தகவைப் பாராட்டித் தமிழ் நாட்டரசு 'பல்கலைக் கழக நல்லாசிரியர்' விருதை 27—11—'86—இல் சென்னையில் நடந்த விழாவில் வழங்கிச் சிறப்பித்தது.

முன்னாள் துணைவேந்தர் முது முனைவர் வ.அய்.சுப்பிரமணியம் அவர்களது மாணவராகிய தாம் அவ்ராற்றிய பணியைத் தொடர நேர்ந்ததைப் பெருமையாகக் கூறும் புதிய துணைவேந்தா,

'உழைத்து முன்னேற வேண்டும்;
உழைப்பால் தம் வாழவை
உயர்த்திக்கொள்வதுடன்
மற்றவர் வாழ்வு உயரவும் உதவ வேண்டும்'.

என்னும் பெருநோக்கைக் குறிக்கோளாக உடையவா.

அகராதிக்கலைப் பணிப்பட்டறை நிறைவு விழா

பல்கலைக் கழக நல்கைக் குழு நல்கையுடன் தொகுப்பியல் துறை நடத்திய 21 நாள் அகராதிக்கலைப் பணிப் பட்டறை 30.11.'86 காலை நிறைவுற்றது.

இப் பணிப்பட்டறையில் வெவ்வேறு மாநிலங்களைச் சேர்ந்த 25 ஆசிரியர்/ஆய்வாளர் கலந்து கொண்டனர். மைசூர், திருவனந்தபுரம், பெங்களூர், பூனா மற்றும் தமிழகத்தைச் சேர்ந்த பல அகராதிக்கலை வல்லுநர்கள் சொற்பொழிவாற்ற அழைக்கப்பட்டனர்.

பங்கு கொண்ட பயிற்சியாளர் அனைவரும் பட்டறையின் வாயிலாகக் கிடைத்த அறிவின் அடிப்படையில் 100 சொற்கள் அடங்கிய ஒரு சிறு எடுத்துக்காட்டு அகராதி ஒன்றினைத் தொகுத்தளித்தனர். இவ்வகராதி தொகுப்பியல் துறைச் சொற்காப்பகத்தில் வைக்கப்பட்டுள்ளது. அகராதிக் கலையைத் தமிழில் கற்றுக் கொள்வது இப் பட்டறையின் அடிப்படை நோக்கம் ஆகும்.

இப்பட்டறையின் நிறைவு விழா சமூகவியல் துறைப் பேராசிரியரும் புலத் தலைவருமான முனைவர் சீ.கே. தேக்கமலை தலைமையில் நிகழ்ந்தது மாஸ்கோ ராதுகா பதிப்பகத்தின் தமிழ் மொழி பெயர்ப்புத் துறைத் தலைவர் விதாலி ஃபுர்னீக்கா பயிற்சியாளர்க்குச் சான்றிதழ்கள் வழங்கிச் சிறப்பித்தார்.

பணிப்பட்டறை இயக்குநர் பேரா. முனைவர் தா.வே. வீராசாமி நன்றி கூறினார்.

தா.வே. வீராசாமி, தொகுப்பியல்துறை

'கொக்கரை'

'கொக்கரை' என்பது தென் தமிழகத்துப் பொதிகை மலையில் வாழ்கின்ற 'காணிக்காரன்' என்ற மலையின மக்கள் பயன்படுத்தும் ஒருவகை இசைக்கருவி.

'கொக்கரை' இரும்பால் செய்யப்பட்டுள்ளது. நீண்ட குழலின் ஊடே பற்களுடன் கூடிய இடைவெளியுள்ளது. இக் குழலுடன் இரும்புக்கம்பி ஒன்று சங்கிலியால் இணைக்கப் பட்டுள்ளது. இக்கம்பியினைக் குழலின் மீது உராயச் செய்து இனிமையான ஓசையை எழுப்புகின்றனர்.

'பிளாத்தி' என்னும் இவ்வின மக்களின் தலைவர் இதனைப் பயன்படுத்துகின்றார். வேறு இனத்தவர் இதனைப் பயன் படுத்துவதில்லை.

இந்த இசைக்கருவியைப் பயன்படுத்தி இவ்வின மக்களின் முன்னோர் பாடிய 'சாற்றுப்பாட்டு' என்னும் பாடலை அத் தொன்மையான மொழியிலேயே தற்போதும் ஆண்கள் மட்டும் பாடுகின்றனர்.

இறைவழிபாட்டின் போதும், நோயாளியைக் குணப் படுத்தும் போதும் பாடுவது வழக்கம். இதைக் 'கொக்கரைப் பாட்டு' என்று அழைக்கின்றனர்.

கோயில் விழாக்களுக்குக் கால்கோள் செய்யும் பொழுது 'கொடுதிச் சாத்து' என்ற பாடலை இக்கருவியைப் பயன் படுத்திப் பாடுகின்றனர்.

குறிபார்க்கும்பொழுது 'பிரச்ச கல்லு' போடும் வழக்கத் துடன் இவ்விசைக் கருவியின் இசையினையும் எழுப்பு கின்றனர்.

'கொக்கரை' இசைக்கருவி தமிழ்ப் பல்கலைக் கழக அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தப்பெற்றுள்ளது (85-2241).

-இரா.பவுன்துரை அருங்காட்சியகம்

சமூகவியல் துறைக் கருத்தரங்கு

தமிழ்ப் பல்கலைக் கழகச் சமூகவியல் துறையின் சார்பில் பல்கலைக் கழக மானியக் குழுவின் நிதி உதவியுடன் 'பல்வேறு சமூகங்களில் மாறிவரும் குடும்பம் மற்றும் திருமண முறைகள்' என்னும் கருத்தரங்கின் துவக்கவிழா பல்கலைக் கழக அரண் மனை வளாகத்தில் 17-11-'86 அன்று காலை நடைபெற்றது. துறைத்தலைவர் பேரா. முனைவர் சீ.செ.தேக்கமலை அனை வரையும் வரவேற்றார். பேரா. இர. ஆலாலசுந்தரம் (பதிவாளர், தமிழ்ப் பல்கலைக் கழகம்) தலைமை ஏற்க, பேராசிரியர் முனைவர் வி.கோமதிநாயகம் (தலைவர், சமூகவியல் துறை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம்) சிறப்புரையாற்றினார். முனைவர் ஆ.இராமநாதன் நன்றி கூறினார். தொடர்ந்து நடைபெற்ற மூன்று நாள் கருத்தரங்கில் அமெரிக்கப் பேராசிரியர் இருவர் உட்பட தென்னிந்தியாவைச் சேர்ந்த பதினேழு அறிஞர்கள் கட்டுரை படித்தனர். கருத் தரங்கில் பின்வரும் கருத்துக்கள் வலியுறுத்தப்பட்டன:

குடும்பம் மற்றும் திருமணம் தொடர்பான ஆய்வுகள் அரிசனங்கள் மற்றும் நிலமில்லாக் கூலியாள்கள் சமூகத்தில் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று பரிந்துரை; இந்தியக் குடும்பங்களை ஆராயும்போது மேலை நாட்டுக் கொள்கை களைப் பின்பற்றாமல் இந்தியச் சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு கொள்கைகளை உருவாக்குவதன் இன்றியமையாமை.

—சமூகவியல் துறை

நுண்கணிம ஆய்விற்கு டென்மார்க்கு நாட்டு நல்கை

டென்மார்க்கு நாட்டைச் சார்ந்த 'கன்சல்ட் பார்மா' என்ற மருந்து தயாரிப்பு நிறுவனம் 'தஞ்சாவூர் மக்களில் இரத்தத் துத்தநாக அளவு' என்பதனை ஆய்வு செய்ய மூன்று மாத காலங்களுக்கு உரூ.26,000 வழங்கியுள்ளது. இவ்வாய்வில் தமிழ்ப் பல்கலைக் கழகச் சித்தமருத்துவத் துறைப் பேராசிரியர் முனைவர் ஜ.சாதீக் அவர்களும், சுவீடன் நாட்டு லுண்ட் பல்கலைக் கழக மருத்துவ மனையாரும் தஞ்சை மருத்துவ அறிஞர் சு.நரேந்திரன் அவர்களும் பங்கேற்கின்றனர். நோய்களில் சித்த மருந்துகளின் பயன்கள் பற்றி ஆராய வருங்காலத்தில் பெரிய நல்கை தந்துதவ 'கன்சல்ட் பார்மா' நிறுவனம் உறுதியளித்துள்ளது.

-சித்த மருத்துவத் துறை

பாரதியின் படைப்புகள்—புதிய ஆய்வுப் பதிப்புகள்

பாரதியின் படைப்புகள் பல பதிப்புகளாக வெளி வந்திருப்பினும் காலமுறைப்படி வரிசைப்படுத்தப்பட்ட பதிப்பு ஒன்று வரவேண்டும்.

தமிழ் நாட்டரசு அவ்வகைப் பதிப்பைக் கொணரத் திட்டமிட்டது. அப்பொறுப்பு தமிழ்ப் பல்கலைக் கழகத்திடம் வழங்கப்பட்டது. பாரதி பாடல்கள், கட்டுரைகள், கவிதைகள் தனித்தனியே ஆயிரம் ஆயிரம் பக்கங்களில் வெளிவருதற்கு மூன்றுலட்சம் உருவா அரசு வழங்குகிறது.

பாரதி பாடல்கள்—ஆய்வுப் பதிப்பு என்னும் முதல் தொகுதி தமிழ் நாட்டரசுக்காகத் தமிழ்ப் பல்கலைக் கழகப் பதிப்பாகத் தைத்திங்களில் வெளிவருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

பதிப்புத்துறை

நல்லாசிரியர் விருது

தமிழ்ப் பல்கலைக் கழக வாழ்வியற் களஞ்சிய முதன்மைப் பதிப்பாசிரியர் முனைவர் நா.பாலுசாமி அவர்களுக்கும், சங்க இலக்கியப் பொருட்களஞ்சிய ஆங்கிலப் பதிப்பின் முதன்மை ஆசிரியர் பேரா. கே.ஜி. சேஷாத்திரி அவர்களுக்கும் 1981-82-இற்கு உரிய நல்லாசிரியர் விருதுகளைத் தமிழ் நாட்டரசு 27-11-'86 அன்று சென்னையில் வழங்கிப் பாராட்டியுள்ளது. இவ்விருது ஒவ்வொன்றும் உருவா ஆயிரமும் பாராட்டுச் சான்றிதழும் பதக்கமும் கொண்டது.

பேரா.நா.பாலுசாமி, தமிழில் முதுகலை இலக்கிய ஆய்வுப் பட்டமும் முனைவர் (பிஎச்.டி.,) பட்டமும் சட்டத்துறைப் பட்டமும் பெற்றவர். 33 ஆண்டுகள் தமிழ்ப் பேராசிரியராகவும் இரண்டாண்டுகள் கல்லூரி முதல்வராகவும் பணியாற்றியவர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகவும் இந்திய மொழிப்புல முதன்மையராகவும் மூன்றாண்டுகள் பணியாற்றி ஓய்வு பெற்றவர். 14 இலக்கிய இலக்கண ஆய்வு வெளியீடுகளை வழங்கியவர். இவரது நெறிப்படுத்தலில் பதினோரு ஆய்வாளர்கள் முனைவர் பட்டம் பெற்றுள்ளனர்.



பேரா.கே.ஜி. சேஷாத்திரி ஆங்கிலத்தில் முதுகலைப் பட்டம் பெற்றுப் பல அரசினர் கலைக் கல்லூரிகளில் ஆங்கில உதவிப் பேராசிரியராகவும், பேராசிரியராகவும் கல்லூரி முதல்வராகவும் 39 ஆண்டுகள் பணியாற்றியவர். நிறைவாகத் தஞ்சை மன்னர் சரபோசிக் கல்லூரியின் முதல்வராக இருந்து 1986-இல் ஓய்வு பெற்றவர்.

சென்னை, மதுரை பல்கலைக் கழகங்களில் பேரவை உறுப்பினராகவும் திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழக ஆட்சிக் குழு உறுப்பினராகவும் இருந்தார்.

பாரதியார் பாடல்களில் சக்திப் பாடல்களையும் வசன கவிதைகளையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். ஆங்கிலத்தில் பல கவிதைகள் கட்டுரைகள், மதிப்புரைகளை எழுதியதோடு சில ஆங்கில நூல்களையும் பதிப்பித்துள்ளார்.

ஆழ்கடலுக்குள் செல்லும் வாகனங்கள்

கடலுக்கடியில் ஆழத்தில் செலுத்தப்படும் வாகனங்களில் பார்ப்பதற்காகப் பயன்படுத்தும் புதிய கருவி ஒன்றை லெனின்கிராடு விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். தலையைத் திருப்பாமலேயே 360 டிகிரி வரை பார்க்கும் திறன் படைத்த, சுத்தியல் போன்ற தலையைக் கொண்ட சுறாமீன் வடிவத்தைப் பின்பற்றியே இந்தக் கருவி உருவாக்கப் பட்டுள்ளது. தண்ணீருக்கடியில் செல்லும் வாகனங்களில் பொருத்தப்படும் இந்தக் கருவியானது, சுற்றிலுமுள்ளவற்றை ஒரு திரையில் படம் பிடித்துக் காட்டும்.

—நன்றி 'சோவியத் சிறப்புக் கட்டுரைகள் 19.9.'86

உலகில் தமிழின் ஒளி

''மிகவும் விரைவிலே தமிழின் ஒளி உலக முழுவதிலும் பரவாவிட்டால் என் பெயரை மாற்றி அழையுங்கள்''

- சி.சுப்பிரமணிய பாரதி
(பாரதி கட்டுரைகள்-''தமிழ்'' கட்டுரை)

சங்க இலக்கியம் தரும் கலைச் சொல்

'சக்கி முக்கி' என்னும் கல்கொண்டு முற்காலத்தில் தீயை மூட்டிக் கொண்டனர். இக்கல்லால் மூட்டப்பட்ட தீ 'ஞெலி தீ' (புறம் 150:12;247:2) எனப்பட்டது.

'ஞெலி' என்னும் சொல் 'உராய்', 'கடை' எனும் பொருள்களைக் கொண்டது. ஒரு கோலின் முனையில் தீயை மூட்டும் கல்லைப் பொருத்தி மற்றொரு கல்லில் கடைந்து தீயை மூட்டினர். இக்கோல் தீக்கடைகோல் எனப்பட்டது. இக்கோலைச் சங்க இலக்கியம் 'ஞெலி கோல்' என்றது.

''கைமுயன்று
ஞெலிகோல்' கொண்ட பெருவிறல் ஞெகிழச்
செந்தீ''

-பெரும்பாணாற்றுப்படை 177-179

'ஞெலிகோல்' கலப்பை அதனொடு சுருக்கி''

-நற்றிணை 142:3

''இல்லிடைச் செருகிய 'ஞெலிகோல்'

-புறநானூறு 315:4

இக்காலத்தில் இரும்போடு இரும்பை ஒட்டவைத்துப் பொருத்தும் பற்றவைப்பு (Welding) க்குப் பயன் படுத்தப்படும் Welding Rod என்பதற்கு 'ஞெலி கோல்' என்னுஞ் சொல்லைக் கலைச் சொல்லாகக் கொள்ளலாம்.

-கோவை. இளஞ்சேரன்

அருணகிரியார் பாடிய தஞ்சை முருகன்

தஞ்சைப் பெரியகோயிலின் இராசகோபுரமாகத் திகழ்வது 'கேரளாந்தகன் திருவாயில்' எனப்படும் முதல் வாயிற் கோபுரமாகும். இதன் முதல் தளத்தில் வடக்குப் பக்க அடைப்புக் கோயிலாக ஒருதளக் கோயிலொன்று காணப் படும். இதன் கிழக்குப் பக்கச் சுவரில் மயில் மீதமர்ந்த அறுமுகப் பெருமானின் திருக்கோலம் பொறிக்கப் பட்டுள்ளதைக் கண்ணுற்றே அருணகிரியார்,

''இராஜகோபுரத்தமர்ந்த பெருமாளே''
''சண்டகோபுரத்து அமர்ந்த பெருமாளே''

எனப் போற்றிப் பரவியுள்ளார். அன்றி, பெரிய கோயிலின் வாயுத் திக்கில் அமைந்துள்ள சுப்பிரமணியர் திருக்கோயில் பரிவாரத் தெய்வக் கோயிலாதலானும், பிற்காலத்தது எனக் குறிக்கப் பெறுதலானும், இராச கோபுரம் பெறாததாதலானும் அருணகிரியாரால் பாடப்பட்டதாகாது. தஞ்சையில் அருணகிரியார் காலத்தில் இராசகோபுரமாகத் திகழ்ந்தது கேரளாந்தகன் திருவாயிலொன்றே யாதலான் மேற்கண்ட கேரளாந்தகன் திருவாயிலில் அமைந்துள்ள கோயிலே அருணகிரியாரால் பாடப்பட்டதாகும்.

-கோ.தெய்வநாயகம்
சிற்பத் துறை

தமிழ்ப் பல்கலைக் கழகச்

செய்தி மலர்

திங்களிதழ்

பதிவெண் 15033/82X1

இ.அ.அ. மட்டும்.

நிருவாக அதிகாரி
தஞ்சை மகாராசா சரபோசி
சரசுவதி மகால் நூலகம்
தஞ்சாவூர்

தமிழ்ப் பல்கலைக கழகம்
தஞ்சாவூர் - 613 007.
தமிழ்நாடு - இந்தியா.

மதிப்புரை

சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம்

தொகுதி-1 அ—ஔ

முதன்மைப் பதிப்பாசிரியர்: இரா.சாரங்கபாணி

"இப்பொழுது வெளிவந்துள்ள முதற்பகுதி உயிரெழுத்துச் சொற்களை மட்டும் உட்கொண்டதாகும். இத்தொகுப்பு நல்ல பயனுள்ள அணுகு முறையைக் கையாண்டுள்ளது. பாடல்களில் காணப்படும் பெயர்களை-குறிப்பு, தொழில், வினையாலணையும் பெயர்கள் உட்பட-அகரவரிசையில் தொகுத்து ஒவ்வொன்றுக்கும் உள்ள பல்வேறு பொருள்களை முறையாக எண்ணிக்கையிட்டு அவ்வப்பொருளுக்கு ஆதாரமான பாடல் மேற்கோள்களும் அவைபற்றிப் பண்டைய உரையாசிரியன்மார் கூறும் அர்த்தங்களும் பதிப்பாசிரியர் ஆய்வாளர் முதலியோர் கூற்றுக்களும் ஒன்றன்பின் ஒன்றாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

இவ்வெளியீடும் பின்னர் வரப்போகும் தொகுதிகளும் தமிழ் இலக்கியத்தைக் கற்போர்க்கும் துய்ப்போர்க்கும் பெரிதும் உதவும் என்று நம்பலாம்."

-நன்றி, தினமணி 17.11.'86

தமிழ்க்கலை

தமிழ் 4, கலை 1,2. மார்ச்சு, சூன் '86

வெளிவந்துள்ளது.

இஃது ஒரு தமிழியல் இதழ்.

இவ்விதழில்,

வெள்ளருகு, பற்பாடகம் ஆகியவைகளின் அழற்சி நிவாரண இயக்கம்— கணிப்பொறியில் மொழிகளின் 'வரிவடிவமாற்றி அமைப்பு' மற்றும் தமிழ்ச் சொல்லாய்வி-பொதுத்துறையும் வணிகக் கொள்கையும்-சுத்தாங்கரின் மகாபாரதமும் தமிழ்ச் சுவடிகளும்-கேரளத்தில் குகைச் சித்திரங்கள்-முளைப்பாரி ஒரு புராதனச் சடங்கு-எங்கள் மரபு-இந்தியாவின் ஐந்தாண்டுத் திட்டப்பணிகள் மற்றும் குடும்பத் திட்ட வளர்ச்சிப் பணிகள் : ஒரு மதிப்பீட்டாய்வு-கலைமேதை வாசுதேவனின் வாழ்க்கையும் அருங்கலைகளும்: அறிமுகம்-தேவாரப் பண்கள்—ஆகிய ஆய்வுக் கட்டுரைகளும்,

பதிப்புகள் பற்றிய மதிப்பீடுகளும்,
ஆறுநூல்களின் மதிப்புரைகளும்
இடம்பெற்றுள்ளன.

முத்திங்கள் இதழ் உறுப்பினர் கட்டணம்

தமிழ்க்கலை — தமிழ்

தமிழ் சிவிலிசேஷன் — ஆங்கிலம்

	இந்தியா மற்றும் இலங்கை	வெளிநாடு
தனி இதழ்	உரு. 15/-	$ 3
2 இணைப்பிதழ்	உரு. 30/-	$ 6
ஓராண்டு	உரு. 60/-	$ 15
ஐந்தாண்டு	உரு. 240/-	$ 60

திங்கள் இதழ் உறுப்பினர் கட்டணம்

செய்தி மலர் — தமிழ்

நியூஸ் புல்லெட்டின் — ஆங்கிலம்

	இந்தியா மற்றும் இலங்கை	வெளிநாடு
ஓராண்டு	உரு. 5/-	$ 4
ஈராண்டு	உரு. 10/-	$ 8
மூவாண்டு	உரு. 12/-	$ 10

பதிப்பாசிரியர்: இயக்குநர், பதிப்புத்துறை
அச்சு: தமிழ்ப் பல்கலைக் கழக மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர்—613 001.